நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், சென்னை - 600 005.

ந.க.எண். 30184/89/எல்5 நாள். 20.4.1989.

சுற்றறிக்கை

பொருள்: நகர்மன்றங்கள் - நகர்மன்றக் கூட்டங்களில் சட்ட மன்ற பேரவை உறுப்பினர் மற்றும் நகராட்சி ஆணையர் அமரும் இடம் குறித்து அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

பார்வை: அரசு கடித எண். (நிலை) 236, ந.நி. & கு.வ. துறை நாள். 17.4.1989.

----

நகராட்சி மன்றக் கூட்டங்களில் சட்டமன்ற பேரவை உறுப்பினரும், நகராட்சி ஆணையரும் கலந்து கொள்ளும் பொழுது அவர்கள் உட்கார வைக்கும் இடம் குறித்து எழுப்பப்பட்ட பிரச்சினை அரசளவில் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவா அறிவுரை வழங்கப்படுகிறது.

நகர்மன்றக் கூட்டம் நடக்கும் போது முதல் வரிசையில், முதலாவதாக சட்டமன்ற உறுப்பினரை உட்கால வைக்கலாம்; நகர்மன்றத் தலைவரின் விருப்புரிமையின்படி ( DISCRETION ) அவருக்குப் பக்கத்தில் அவரைப் பார்த்தவண்ணமோ, அல்லது அவருக்குப் பின்புறமோ, நகராட்சி ஆணையாளரை உட்கார வைக்கலாமென்று அரசால் கருதப்படுகிறது.

எனவே, இனிவரும் காலங்களில் மேற்கண்ட அறிவுரைப்படி இயங்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/-பொ.இராமலிங்கம்,
இயக்குநருக்காக.

பெறுநர்:

அனைத்து நகர்மன்றத் தலைவர்கள்,
அனைத்து நகராட்சி ஆணையர்கள்,
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக
இயக்குநர்கள்.

நகல்:

சிறப்பு ஆணையர் மற்றும் அரசுச் செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும்
குடிநீர் வழங்குத்துறை,
சென்னை - 600 009.

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

கண்காணிப்பாளர்.
20/4/89